தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-5-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விதை மையத்திற்கு தேசிய அளவிலான சிறந்த விதை தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்திற்கான விருது

அகில இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தின் தேசிய விதைத் திட்டத்தின் 33-வது வருடாந்திர ஆய்வு கூட்டம் மற்றும் அகில இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தின் விதைத் திட்டத்தின் 13-வது வருடாந்திர ஆய்வு கூட்டம், புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் அமைந்துள்ள பண்டிட் ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த 9-5-2018 முதல் 11-5-2018 வரை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அகில இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் கீழ் செயல்படும் அனைத்து ஆராய்ச்சி மையங்கள் மற்றும் மாநில வேளாண்மைப் பல்கலைக்கழக விதை அறிவியல் துறை விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். இந்த ஆராய்ச்சி கூட்டத்தில், இந்திய அளவில் விதை தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சி மேற்கொண்ட 24 மையங்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் "விதை மையம்" சிறந்த ஆராய்ச்சி மையமாக தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான விருதினை மாண்புமிகு புதுச்சேரி மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர். கமலகண்ணன் அவர்கள் விதை மையத்தின் தனி அலுவலர் (விதைகள்) முனைவர் பொ. செல்வராஜு அவர்களிடம் வழங்கி கௌரவித்தார்கள்.

இந்நிகழ்வில் முனைவர் எஸ். கே. யாதவ், உதவி பொது இயக்குனர் (விதைகள்), அகில இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், முனைவர் பி. கே. அகர்வால் திட்ட இயக்குநர் (தேசிய விதை திட்டம்), முனைவர் வி. கந்தசாமி, முதல்வர், பண்டிட் ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், காரைக்கால் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதை மைய விஞ்ஞானிகள், முனைவர் வெ. வாகேஸ்வரன், முனைவர் ந. இந்திரா மற்றும் முனைவர் இரா. அருள்பிரகாஷ் ஆகியோர் பங்கு பெற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்